MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

# "பொருந்தாத் துணையும் துணை இழந்தார் நிலையும்"

"Incomportible Companion and Lost Partner"

கி ராஜ்குமார்,

மலை மேடு, அன்னை இந்திரா குடியிருப்பு,

அலவாக்கோட்டை, சிவகங்கை மாவட்டம்.630553

kumar1990svg@gmail.com. - 9655280231.

DOI 10.5281/zenodo.16432255.

Abstract :

In this treatise Incomportible Companion and the hardships faced to it and the actions to be taken to rectify it and the solutions for it found in Literature is dealt with. Like wise to explain the position of the Last Partner and its influence in like and the neassity of remarriage is the intention of this treatise.

Key Words: Incomportible Companion - Lost Partner - Remarriage - Thanipatal Thirattu .

## முன்னுரை:

மக்களினம் தோன்றி பரவுவதற்கும் நிலை பெறுவதற்கும் அடிப்படையான காரணங்களில் ஒன்று ஆண் பெண் சேர்க்கைக்கு வழிகோலும் குடும்ப வாழ்க்கையாகும். நாடோடியாக உண்டு உயிர்த்துத் திரிந்த மனிதருக்கு தன் பாலினத் தேவைகளை நிறைவு செய்வதற்கும் தன்னுடைய பண்பு நலன்களைக் கடத்துவதற்கான அடுத்த தலைமுறை உருவாக்குவதற்கும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதல், பராமரித்துக் கொள்ளுதல் உள்ளிட்ட நோக்கங்களுக்காக குடும்ப முறை தோன்றியுள்ளது. மனிதன் குடும்ப முறையைத் தோற்றுவித்ததற்கான காரணங்களை நிறைவு செய்வதன் பொருட்டு மண உறவுகள் இருந்துள்ளதா என்ற வினாவை இக்கட்டுரை எழுப்பி பொருந்தாத் துணை பெற்றவர்களைப் பற்றியும் துணை இழந்தார் பற்றியும் இலக்கியங்களில் வாயிலாக ஆராய்ந்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தமிழர்களின் திருமண அமைப்பு:

குடும்பம் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைவது திருமணம் தான். அத்தகைய திருமணம் தாமே எதிர்பட்டுத் தம்முள் கலந்த காதல் திருமணமாகவோ அல்லது கொடுப்பார் கொடுக்க பெரியோர்களால் நிகழ்த்தப்பட்டதாகவோ அமைந்திருக்கும். இத்தகைய திருமண முறைகளைப் பற்றி தமிழ் இலக்கியங்களில் நெடுக காணலாம்.



http://Creativecommons.org//license/by/4.0/.

"யாயும் ஞாயும் யாரோ கியரோ" எனத் தொடங்கும் குறுந்தொகை பாடல் வழி 'செம்புலப் பெயல்நீர் போல' தம்முள் கலந்து உருவான காதல் மணங்களையும்

"அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர்கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே" (குறுந்தொகையின் 146)

என்ற வெள்ளிவீதியார் பாடல் மூலம் பரிசம் போட்டு பிறர் கொடுக்க பெண்ணைத் திருமணம் செய்த முறையையும் காணலாம்.

காதல் பொதுவானது:

"சித்திரமா மண்டபங்கள், தென்றல்வரு சாளரங்கள்,
பத்தி யுலாவும் பளிக்கறைகள்,- இத்தனை விட்டு
இக்குச் சிலையா ன்இருப்பிடமென்று ஆர்சொன்னார்
இக்குச் சிலையானுக்கு இன்று"(த.பா.தி)

'ஓவியங்கள் எழுதப்பெற்று உயர்ந்த மண்டபங்களும் தென்றல் காற்று வந்து வீசுவதற்குரிய பலகணிகளும், உல்லாச நடை கொண்டு உலாவுவதற்கு ஏற்ற பளிங்கினால் கட்டப்பட்ட அறைகளும் ஆகிய இவற்றையெல்லாம் விட்டு, இந்த குடிசையை நான் குடியிருக்கின்ற இடம் என்று கரும்பை வில்லாகவுடைய மன்மதனுக்கு யார் சொன்னார்கள்' என்று ஒரு தலைவி பாடுவதாக மதுரகவியார் பாடியுள்ளார். குடிசையில் வாழும் பெண்ணாக இருந்தாலும் அவளுக்கும் காதல் உண்டாவது இயற்கை என்பது கருத்து.

திருமண வாழ்க்கை:

இல்லறம் அல்லது நல்லறம் அன்று (கொ.வே 3)

மனைவி மக்களோடு கூடி வாழும் இல்லற வாழ்க்கையைத் தவிர உள்ள மற்றைய துறவறம் உள்ளிட்ட ஒழுக்கங்கள் ஒழுக்கமாகாது.

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

முயல்வாருள் எல்லாம் தலை” (குறள் 47)

என்ற இயல்பாக இல்வாழ்க்கை வாழ்பவனுடைய சிறப்புகளை வள்ளுவரும் கூறியுள்ளார். மனைவி மக்களோடு கூடி வாழும் இல்லற வாழ்வே மனித சமுதாயத்திற்கு ஏற்றதாகும்.

**மனைவியும் கணவனும்**

மனையின் கண் இருந்து அறம் புரியும் உரிமை தலைவிக்குச் சிறப்பாக உரியதாகும். இத்தொடர்பு பற்றியே தலைவிக்கு மனைவி, இல்லாள் என்னும் பெயர்கள் எழுவனவாயின. இவற்றிற்கு நேரான ஆண்பாற் சொற்கள் இல்லாமையும் தலைவியின் மனை உரிமையை மிகுதிப்படுத்தும். தலைவனது வாழ்க்கைக்குத் துணையாய் நின்று வாழும் மனைவியை திருவள்ளுவர் 'வாழ்க்கை துணை' என்னும் பெயரால் சிறப்பிக்கின்றார். எல்லாப் பொருள்களும் நிரம்பி இருப்பினும் வாழ்க்கை துணையாகிய இல்லாளின் ஒளி நிரம்பாத வீடு வீடாகாது. இதனாலேயே" மனைக்கு விளக்கம் மடவாள்" என புலவர் பாடுவாராயினர். நாள் முழுதும் உழைத்து தளர்ந்து வாழ்வை இருளென வெறுத்து வீடு சேரும் கணவனை ஏற்று உபசரித்து மீண்டும் அவன் வாழ்வில் ஒளி உண்டாக்கும் மனை விளக்காக விளங்குபவர் மடவார். தானே அன்புடன் ஆக்கிய உணவினை கணவன் மிக இனிதெனக் கூறி உண்ணுதலைக் கண்டு மனைவி மகிழ்வாள்

"தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று
ஒண்ணுதல் முகனே"(குறுந்தொகை)

கணவன் என்பான் தன் மனையாளையும் உள்ளன்போடு காத்து நிற்பனாய் இருத்தல் வேண்டும். வறுமை இன்றி குடும்பம் வாழ வினை(வேலை) மீதுக் கவனம் கொண்டு பொருளீட்ட வேண்டும்

**திருமணப் பொருத்தம்:**

சாதகம் பார்த்து திருமணம் செய்யும் நிலை பல குடும்பங்களில் உள்ளது.“சகுனம் சொன்ன பல்லி கழுநீர்ப் பானையில் விழும்" என்பது பழமொழி.

சத்தமும் சோதிடமும் என்றாங்கு இவைபிதற்றும்

பித்தரில் பேதையார் இல் (நாலடி பா 52)

தருக்கத்தையும், சோதிடத்தையும் நம்புகிறவர்கள் பைத்தியக்காரர்கள்; அவர்களைக் காட்டிலும் அறிவற்றவர்கள் எவரும் இல்லை என்கிறது நாலடியார் பாடல் ஒன்று.


http://Creativecommons.org//license/by/4.0/.

எனவே மூடத்தனங்களை திருமணப் பொருத்தங்கள் என்று பார்ப்பதை விடுத்து இன்றைய காலச் சூழலுக்கு ஏற்ப அவர்கள் தம் மன விருப்பத்தை அறிந்து மணம் செய்து வைப்பதே அறிவுடைமையாகும்.

"நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியஞ் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ்"(சிலம்பு)

என்று நாள்மின் கோள்மீன் பார்த்து 'காதலர் பிரியாமல் கவவுக்கை ஞெகிலாமல் தீதருக' என வாழ்த்தி சீறும் சிறப்புமாக நடந்த கண்ணகிகோவலனின் திருமணம் அவர்களது மண வாழ்க்கைச் சிறக்காமல் போனதை அனைவரும் அறிவோம்.

"எல்லா உயிருக்கும் இன்பம் என்பது

தான் அமர்ந்து வரும் மேவற்றாகும்"(பொரு.249)

காமம் என்னும் காதலே உலகு ,உயிர் தோற்றத்திற்கு உயிர்ப்பாகும் என்பதை உணர்ந்து காதல் திருமணங்களை ஏற்றுப் போற்றுவோம். எனினும் இத்தகைய காதல் திருமணங்களில் பொய்யும் குற்றமும் எழுமெனில் பெரியோர்களே பண்டைய காலத்தில் திருமணம் செய்து வைத்தனர் என்பதை

" பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

(இங்கு ஐயர் என்பது பெரியோர்களை குறிக்கிறது) பெரியோர்களே வரன் பார்த்து திருமணம் செய்தும் வைத்தனர். இன்றும் இத்தகைய திருமணங்கள் நிகழ்கின்றன.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர்
கொடுப்பக்கொள் வதுவே(கற்140)"

எனும் கூற்றுக்கிணங்க பெண் கொடுப்பவரும் எடுப்பவரும் தம்முள் ஒத்துப் பேசி முடிவு செய்யும் திருமணங்களில் அதிக எதிர்பார்ப்புகள் பலரது திருமண வாய்ப்புகளைத் தள்ளிப் போகச் செய்கிறது என்பதும் மறுப்பதற்கு இல்லை.

"பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென


http://Creativecommons.org//license/by/4.0/.

முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

இதுவே பழங்காலத்தில் தலைவனும் தலைவியும் பார்த்த பொருத்தங்கள் ஆகும். பிறப்பு, குடும்பம், தலைவியைப் பாதுகாக்கும் தன்மை, அவர்களுக்குள்ளான வயது , உருவம், கல்வி, அன்பு, உணர்வு, செல்வம் முதலிய பத்து பொருத்தங்களைத் தொல்காப்பியர் காலத்தில் பார்த்துள்ளனர். 'இளமைக்கு மிஞ்சிய வளமை ஏதும் இல்லை' என்பதை உணர்ந்து இளமையது அருமை கருதி ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட வேண்டும் என்பதே என் கருத்தாகும்.

**சாதி நெருக்கடி**

மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமும் உண்டே(கற் 4)

என்று தொல்காப்பியத்திலேயே வேறுபாடுகள் தலைதூக்கிவிட்டது என்பதை அறிய முடிகிறது. சமூகத்தில் நிலவும் சாதிய மனப்பான்மையினால் பெரும்பாலானவர்களின் உணர்வுகள் நசுக்கப்படுகின்றன. சாதியற்ற திருமண முறைகள் உலக சமூகத்தில் மலர வேண்டும். அந்த நாளே மனித இனத்தின் பொன் நாளாக அமையும்.

**பிரிவும் ஆற்றிஇருத்தலும்:**

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்

பெண்ணிற் பெருந்தக்க தில்(குறள்1137)

வரைவிடைப்பிரிவு

இட்டுப் பிரிவு

இவை இரண்டும் களவு காலத்துக்குரியவை

ஓதற் பிரிவு

பகைப்பிரிவு

தூதிற்பிரிவு

பரத்தையிற் பிரிவு

கற்பு காலத்துக்குரிய வை

துணைப் பிரிவு


http://Creativecommons.org//license/by/4.0/.

காவற்பிரிவு

பொருட்பிரிவு

இவை களவுக்கும் கற்புக்கும் உரியவை. இவ்வகைப் பிரிவுகள் பழங்காலத்தில் வகைப்படுத்தப்பட்டவை. இன்று கணவன் மனைவியினுடைய பெரும்பாலான பிரிவுகள் பொருட்பிரிவாகவே உள்ளன. பொருள் தேடி உள்நாட்டிலும் மற்றும் மேற்காசிய நாடுகள் கிழக்காசிய நாடுகள் உள்ளிட்ட உலகின் மற்ற பெரும்பாலான நாடுகளுக்கு ஆண்கள் செல்கிறார்கள்.

"சிறு கோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே"(குறுந் 18)

இது பெண்ணுக்கு மட்டும் அன்று. கணவனோ மனைவியோ தங்களது உணர்வுகள் எத்துணை பெரிதாக இருந்தாலும் அவற்றை அடக்கி ஆற்றி இருக்க வேண்டும். அவ்வாறு இன்றேல் குடும்பம் குழப்பத்தைச் சந்திக்கும். தொல்காப்பியர் காலத்தில்

"முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை" அதாவது கடல் கடந்து செல்லும் வெளிநாட்டு பயணங்களில் தங்கள் மனைவியை அழைத்துச் செல்வதில்லை . இன்றைய காலத்தில் வாகனப் பெருக்கம் தொழில்நுட்பம் முதலியவற்றின் காரணமாக வெளிநாடுகளில் வேலை பார்ப்பவர்களில் சிலர் தங்கள் மனைவியையும் அழைத்துச் செல்கின்ற வசதி படைத்தவர்களாக உள்ளனர். இது வரவேற்கத்தக்கது.

ஆடையின்றி வாடையில் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிருக்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே!

என்று சத்திமுற்றப் புலவர் தம் வறுமை நிலையை வெளிப்படுத்தியுள்ளார். அது அவருக்கு மட்டும் அன்று.தன் மனைவி மக்களை விட்டு விட்டு வெளிநாட்டில் வேலை நிமித்தமாக பிரிந்து வாழும் ஒவ்வொரு ஆணின் நிலையுமாகும். குடும்ப வாழ்வை மேம்படுத்த தன்னை மெழுகாய்க் கரைக்கின்ற இத்தகைய ஆண்களுக்கு அவர்களின் மனைவிமார்கள் உண்மையுடனும் நேர்மையுடனும் இருக்க வேண்டுவது அனைவரது விருப்பமும் ஆகும்.

பொருத்தமின்மை:

துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு(கொ.வே.41)


http://Creativecommons.org//license/by/4.0/.

தன் கணவனுக்கு உற்ற துன்பத்தைக் கண்டு மனம் பதறாத பெண்டிர், அவன் மடியில் கட்டிக் கொண்டுள்ள நெருப்புக்கு ஒப்பாவார்.

'கழுதைக்கு வாக்கப்பட்டு உதைக்கு அஞ்சலாமா?' என்ற பழமொழிக்கு ஏற்ப சிலரது வாழ்க்கை விதியை நொந்து கழிகிறது.

இருந்து முகந்திருத்தி, ஈரொடு பேன் வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப- வருந்தி
ஆடினாள் பாடினாள் ஆடிப்பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத் தான்

என்ற ஔவையார் பாடலில் அருகில் இருந்து முகத்தைத் தடவிக் கொடுத்து,அவள் கூந்தலை வாரி இந்த ஈரையும் பேனையும் வழித்திட்டு, மெல்ல' விருந்தாளி வந்து இருக்கிறது' என்று கணவன் சொன்னான். உடனே அவள் மனம் வருத்தம் அடைந்தாள்; எழுந்து குதித்தாள்; திட்டினாள்; ஓடிப்போய் பழைய முறத்தைக்( பழைய சோலகு) கொண்டு வந்து கணவனை ஓட விரட்டி அடித்தாள்.

ஏற்புடைய துணை இல்லை எனில் பிரிந்து வேறு ஒரு துணையை மணந்து கொள்ளுதல் இருவருக்கும் ஏற்புடையது. அல்லாமல் உடன்பாடு இல்லாத இருவர் வாழ்வது 'பாம்போடு உடன் உறைந்தற்று' என்பதைப் போல கொடுமையானது. இது இருபாலருக்கும் பொதுவானது தான்.

பத்தாவுக்கு ஏற்ற பதிவிரதை உண்டானால்,
எத்தாலும் கூடி இருக்கலாம்- சற்றேனும்
ஏறுமா றாக இருப்பாளே ஆமாயின்
கூறாமல் சன்னியாசங் கொள்

கணவனுக்கு தகுந்த கற்பு நெறியுள்ள மனைவி வாய்த்திருந்தால் எவ்விதம் ஆயினும் சேர்ந்து மகிழ்ச்சி அடையலாம். அவ்விதம் இல்லாமல் சிறிதேனும் ஏறுமாறாக மதிப்பின்றி நடப்பவளாக இருப்பாளாயின் யாரிடமும் சொல்லாமல் துறவறத்தைக் கைக்கொள்வாயாக என்று உரைக்கிறார். இன்றைய சூழலில் துறவறம் தேவையில்லாதது இருபாலரும் தங்களோடு ஒத்துப் போகிற துணையை நாடிச் சட்டத்திற்கு உட்பட்டு பிரிந்து வேறு ஒருவருடன் திருமணம் செய்து கொள்வதே ஏற்புடைய ஒன்று.

பாலினப் பாகுபாடு

தலைவி ஒருத்தியை அடையக் கருதும் தலைவன் தன் மானத்தையே துணைக் கோடாக கொண்டு மடல் ஏறி தன் விருப்பத்தை ஊரார் அறியச் செய்து தான் விரும்பிய அவளை மணந்து கொள்ள முடிகிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

" மாவென மடலு மூர்ப பூவென எருக்கங் கண்ணியும் சூடுப"

குடும்பத்திற்கு நேரம் ஒதுக்காமை:

"சருகரிக்க நேரமன்றிக் குளிர் காய

நேரம் இல்லாத் தன்மை தானே"(த.ச.28)

குடும்பத்தினரோடு நேரம் ஒதுக்கி அன்பாக பேசுதல் , அரவணைப்பு, ஆதரவுடன் இருத்தல், வேலைகளைப் பகிர்ந்து கொள்ளுதல், கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், வலி நேரத்தில் வாஞ்சையோடு நடத்தல், இவ்வாறு ஒவ்வொருவரின் சூழலுக்கு ஏற்ப இணக்கமோடு தமது அனுபவத்துக்கு ஏற்ற உடன்பாடோடு வாழ்க்கையை நகர்த்துதல் மகிழ்வான குடும்ப வாழ்க்கைக்குத் தேவையானதாகும்.

ஐயம்:

"தேரையார் செவ்விளநீர் உண்ணாப் பழிச்சுமப்பார்!
நாரியர் தாம்அறிவார் நாம் அவரை நத்தாமை;
கோரை வாய்ப் பொன் சொரியும் கொல்லிமலை நன்நாடா
ஊரைவாய் மூடவுலை மூடிதான் இலையே!"(த.பா.தி)

தேங்காய்க்கு உண்டாகும் ஒருவகை நோய்க்கு தேரை என்று பெயர் அந்நோய் வந்தால் உள்ளே நீர் வற்றி விடுவதோடு தேங்காயும் அழுகிவிடும். இந்த உண்மையை அறியாத பாமர மக்கள் தேரை மோந்ததனால் தேங்காய் கெட்டு விட்டது என்று ஒரு பாவமும் அறியாத தேரைஎன்ற( தவளை போன்ற) உயிர்இனத்தின் மீது பழி சுமத்துவர். அதைப்போல அரசர் மனைவி என் அருகில் படுத்திருந்தும் அவர்கள் மீது நான் ஆசை கொள்ளாவிட்டாலும் ஊரில் உள்ளவர்கள் என் மீது பழி சுமத்துவார்கள் என்று சோழனுடைய சால்வையைப் போர்த்துக் கொண்டு படுத்திருந்த கம்பரை தனது கணவன் என கருதி அவருடன் அரசன் மனைவி படுத்துக் கொண்டதை உணர்ந்து கம்பர் பாடியதை கொள்ளலாம். உலகம் தங்களுடைய துணையைப் பற்றி பலவிதமாக ஐயக்கண் கொண்டு தூற்றவும் செய்யும் அவற்றையெல்லாம் நம் மனதில் ஏற்றி கவலை கொண்டால் ஐயம் துளிர்விட்டு நம்மை அழிப்பதோடு நம் குடும்பத்தையும் அழித்தொழிக்கும்.

ஏமாறலும் ஏமாற்றுதலும்:

'இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரின் கணவனை
யானாகியர் நின் நெஞ்சுநேர் பவளே'(குறு49)

என்று உண்மை அன்பினை கொண்டுள்ள மனைவி எல்லா ஆண்களுக்கும் கிடைப்பதில்லை.



http://Creativecommons.org//license/by/4.0/.

"சாதல் அஞ்சேன் அஞ்சுவென் சாதல்
பிறப்புப் பிறிதாகுவ தாயின்
மறக்குவென் கொல்லென் காதலன் எனவே"

என்று உரைக்கிற பெண்கள் தற்காலத்துக் கிடைப்பது அரிது.

"அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்த லோம்புமதி பூக்கே ழூர"

நிமிர்ந்த மார்பகங்கள் தளர்ந்து மேனி சுருக்கங்கள் கண்டு நெடிய கூந்தல் நரைத்த போதும் திருமணமான முதல் நாள் போன்று முதுமை எய்திய காலத்தும் அவள் மீது அன்பு பாராட்டும் ஆண்மகன் குறைவு.

குடும்ப வாழ்வு கசந்த பிறகு கணவனோ அல்லது மனைவியோ வேறு ஒருவர் மீது விருப்பம் கொள்கின்றனர் இது குடும்ப வாழ்வைச் சீரழிக்கிறது.

மைவிழி யார்தம் மனைஅகன்று ஒழுகு(கொ.வ 78)

விலைமாதர்களின் வீட்டை அணுகாமலே விலகி நன்னெறியில் நடப்பாய் என்கிறது.

பேதைமை என்பது மாதர்க்கு அணிகலன்(கொ.வே66)

இங்கு பேதைமை என்பது அறிந்தும் அறியாதது போல இருக்கும் தன்மை.இது நமக்கு எக்காலத்துக்கும் ஏற்புடைய கருத்தல்ல.

பிறன்மனை புகாமை அறமெனத் தகும்(கொ.வே 61)

வேறொருவன் மனைவியை விரும்பி அவன் வீட்டில் போகாமயே சிறந்த அறம் என்பதாகும் . இத்தகைய அறத்தையே'பிறன்மனை நோக்காப் பேராண்மை' என்றார்கள் சான்றோர்கள். "சோற்றுப் பானை உடைந்தால் மாற்றுப் பானை இல்லை" என்ற பழமொழிக்கு ஏற்ப நாம் இப்போது பெற்றுள்ள துணையை இழந்தால் அந்த இடத்தை வேறு ஒருவரால் முழுமையாக நிரப்பி விட முடியாது என்பதை ஒவ்வொருவரும் வாழ்வில் உணர வேண்டும்.

உடல் அழகு மீது கொண்ட காம நெஞ்சம் அழகு அழியும்போது வேறொன்றைத் தேடிப் புறப்பட எத்தனிக்கிறது. இதுவும் மண வாழ்க்கைச் சீரழிய காரணமாக அமைகிறது.

கச்சிருக்கும் போது கரும்பானேன்; கைக்குழந்தை
வச்சிருக்கும் போது மருந்தானேன்;- நச்சு இருக்கும்


http://Creativecommons.org//license/by/4.0/.

கண்ணார் கரும்பானார் காணவும் நான் வேம்பானேன்
அண்ணா மலைஅர சுக்கு.

அண்ணாமலை அரசனுக்குக் கச்சு இறுக்கமாய் கொங்கை விம்மம்படி இருந்த போது கரும்பு போல் இனியவள் ஆனேன். குழந்தை பெற்று கையில் வைத்து இருக்கும் போது நோய்க்கு மருந்து போல் பயன்பட்டேன். குடிகொண்டு இருக்கும் கண்களை உடைய விலை மகளிர் கரும்பு போல் ஆனார்கள். இப்போது பார்ப்பதற்குக் கூட நான் வேம்பு போலக் கசப்பவள் ஆனேன் என் செய்வேன் இப்பாலனால் எனக்கு இந்தத் துன்பம் நேரிட்டது என்று பெண்ணொருத்தி பாடுவதாக சுப்பிரதீபக்கவிராயர் பாடல் குழந்தைப் பேற்றின் காரணமாக பெண் அழகு இழந்ததையும் அதன் பொருட்டு விலைமகள் மீது பார்வையைச் செலுத்திப் போவதை இப்பாடல் பதிவு செய்துள்ளது. இவகையான ஆண்கள் மற்றும் பெண்கள் இருக்கும் குடும்பம் மணம் முறிவைச் சந்திக்கும்.

குழந்தையின்மை:

இல்லறத்தின் பயன் நன்மக்களைப்பெற்று சுற்றத்தாரோடு அறம் செய்து வாழ்வதே ஆகும். குழந்தை பெறுவது பெண்ணின் கடமை என்றும் அக்குழந்தையைச் சான்றோன் ஆக்குவது தந்தையின் கடமை என்றும் நம்பிக்கை தமிழ்ச் சமூகத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது. குழந்தைப் பேறு என்பது குடும்ப வாழ்வின் கட்டாயமான எதிர்பார்ப்பாகும். அதை நிறைவு செய்ய இயலா நிலையும் மணமக்களின் மணமுறிவுக்கு வழி வகுத்து விடுகிறது.

'படைப்பு பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெறும் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே"

எனும் புறநானூற்று(188) பாடல் மயக்கம் தருகின்ற மக்களைப் பெறாத வாழ்க்கை பயன் இல்லாதது என்று உரைக்கிறது.

'குழல் இனிது யாழ் இனிது என்பதன் மக்கள்

மழலைச் சொல் கேளாதவர்'

என்று திருவள்ளுவரும் குழந்தைப் பேற்றினால் பெறலாகும் இன்பத்தைப் பற்றி கூறி இருக்கிறார்.


http://Creativecommons.org//license/by/4.0/.

எவ்வளவுதான் கணவனும் மனைவியும் புணர்வின்பத்தில் திளைப்பினும் " மோகம் முப்பது நாள் ஆசை அறுபது நாள்" எனும் பழமொழிக்கு ஏற்ப புணர்வின்பம் சலிப்பை ஏற்படுத்தி விடும். அது மண முறிவுக்கே இட்டுச் செல்லும்.

"மறியிடைப் படுத்த மான் பிணை போல்"( ஐங்குறு401) மகனை நடுவாக வைத்து கணவனும் மனைவியும் தூங்குகின்ற சூழலே மிகுந்த இன்பத்தை நல்கக் கூடியது. கணவன் மனைவிக்கு உள்ளான இடைவெளியைக் குறைத்து அவர்களுக்குள் நல்ல பிணைப்பை ஏற்படுத்துவது குழந்தைப் பேறே ஆகும்.

"பிள்ளைப்பெற் றவர் தமைப்பார்த் திருந்துபெரு

மூச்செறியும் பெற்றியாரே"(த.ச18) என்றும்

சந்ததிக்கு அழகு வந்திசெய் யாமை"(கொ.வே26)

வந்தி செய்யாமை - மலடி செய்யாமை. இது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருந்தும்.

ஒருவன் தன் மனைவியை வீட்டில் வாளா விட்டுவிட்டுப் பிறரோடு உறவு கொண்டு தன் வம்சத்தை விருத்தி செய்யாமல் ஒழிதல் ஆகாது.

தன் மனையாளைத் தனிமனை யிறுத்திப் பிறன் மனைக்கேகும் பேதையும் பதரே

குழந்தை இல்லாதார் நிலை இவ்வாறு இருக்க ஆனால் குழந்தை பெற்றவர்கள் குழந்தையால்தான் தன் அழகு கெட்டதென்றும் அதனால்தான் தன் கணவன் தன்னை விட்டு வேறு இடம் சென்றான் என்று பாலனைப் பழித்தல் எனும் துறையில் பாடல்களை நாம் பார்க்க முடிகிறது

"சதிராக நந்தி பரன்தனைக் கூடிய தையலரை
எதிராக்கி என்னை இளந்தலை ஆக்கினன் அங்கமெல்லாம்
அதிராக்கித் தூசும் அழுக்காக்கி அங்கம் அங்காடிக் கிட்ட
பதராக்கி என்னையும் பற்றாமல் ஆக்கிய பாலகனே."(நந்தி.249)

குழந்தையைப் பெற்றதனால் தான் தன்னுடைய ஆடை அழுக்காகவும் அழகு நலம் கெட்டும் அங்காடித் தெருவில் கொட்டிய பதரைப்போல உள்ளீடு இல்லாமல் மெலிந்தும் இருக்கிறேன். அதனால் தலைவர் என்னை விட்டகன்றார். இதெல்லாம் உன்னால்தான் நேர்ந்தது. என்று தன் மகனைப் பழித்துக் கூறுவதாக அமைந்தது இவ்வகைப் பாடல். இத்தகைய மனநிலையில் உள்ள பெண்கள் தான் குழந்தை பெற்ற பிறகும் தங்கள் அழகு கெட்டுவிடக் கூடாது என்று கருதி தாய்ப்பால் ஊட்ட மறுத்தும் இன்னும் ஒரு படி மேல் போய் நல்ல உடல்நலம் மிக்க பெண்கள் கூட குழந்தை பெற்றுக் கொள்வதால் தங்கள் அழகு கெட்டுவிடும் என்று கருதி வாடகைத் தாயின் மூலம்


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

குழந்தை பெற்று கொள்வது சமூகம் போற்றுகின்ற பெண்மையின் அணிகலனாய்த் திகழ்கின்றத் தாய்மையை இழிவு செய்வதைப் போல அமைகிறது.

**குழந்தையின்மைக்குத் தீர்வு:**

பண்டைய காலம் தொட்டு திருமணமானவர்கள் சிலரிடம் குழந்தையின்மைச் சிக்கல் எழுந்திருக்கிறது. அதனைத் தீர்க்கும் முகமாகப் பெரியோர்கள் அறிவுரைக் கூறுதலும் உண்டு. அப்படித்தான்

' பூப்பின் புறப்பா டீராறு நாளும்
நீத்தகன் றுரையார் என்மனார் புலவர்(கற்-46)'
'தீண்டாநாள் முந்நாளும் நோக்கார்நீ ராடியபின்
ஈராறு நாளும் இகவற்க என்பதே
பேரறி வாளர் துணிவு( ஆசாரக்கோவை 42)'
பூத்த காலைப் புனையிழை மனைவியை
நீராடிய பின் ஈராறு நாளும்
கரு வயிற் றுறூஉங் கால மாதலின்
பிரியப் பெறான்..(அகத் 87)

பூப்புப் புறப்பட்ட நாளிலிருந்து மூன்று நாள் போக நாலாவது நாளில் இருந்து 15ஆம் நாள் முடிய உள்ள பன்னிரு நாளும் கருத்தரிக்கும் காலமாகும் என்பதைக் கணித்துச் சொல்லியுள்ளனர். இன்றைய அவசர காலத்தில் உணவு முறைப் பழக்கவழக்கம் உள்ளிட்டவற்றின் மாற்றங்களினால் குழந்தையின்மைப் பெரும் சிக்கலை இச்சமுகத்திற்கு ஏற்படுத்தி இருக்கிறது. இதனைக் களைய மருத்துவரின் ஆலோசனையைப்பெற்று ஆணும் பெண்ணும் குழந்தையின்மைக்கு முறையான சிகிச்சைப் பெற்றுக் கொண்டால் குடும்ப வாழ்விற்கு நல்லது.

**கருத்து உடன்பாடின்மை:**

'சொன்னபடி கேட்டால் சுட்டவுடன் தருவாள்'
'சொரிந்து தேய்க்காத எண்ணெயும் பரிந்து இடாத உணவும் வீண்'
"காணக்கண் கூசுதே! கையெடுக்க நாணுதே!
மாண் ஒக்க வாய் திறக்க மாட்டாதே!- வீணுக்கென்
என்பெல் லாம்பற்றி எரிகின்றது; ஐயையோ!
அன்பில்லாள் இட்ட அமுது

ஐயையோ! அன்பு இல்லாதவள் அளித்த உணவைக் காணும் போது கண் கூசுகிறது; கைகள் அந்த உணவை எடுக்க நடுங்குகின்றன. தின்பதற்கு, பெருமை பொருந்திய எனது வாயைத் திறக்க முடியவில்லை. முகம் மலர்ந்து அன்புடன் உபசரியாத அவள் முகத்தைப் பார்க்கும்


http://Creativecommons.org//license/by/4.0/.

போது எனது உடம்பின் எலும்புகளில் எரிச்சல் எடுக்கின்றது. அன்பில்லாப் பெண்டிரைக் குறித்து ஒரு நாள் உணவு உண்ணப்போன பதை பதைப்போடு அவ்வையார் எடுத்துரைக்கிறார்.

"சண்டாளி, சூர்ப்பநகை, தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்என்று கொண்டாயே- தொண்டர்
செருப்படிதான் செல்லாவுன் செல்வம் என்ன செல்வம்?
நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர்"(த.பா.தி)

இழிந்த தன்மை உடையவளை, சூர்ப்பநகையைப் போலவும், தாடகையைப் போலவும் கொடூரமான வடிவு உடையவளே மனைவி என்பதாகப் பெற்றாயே! தொண்டர்களுடையச் செருப்படித் தூசுக்கும் இணையில்லாத உனது செல்வமும் ஒரு செல்வமாகுமா? அதைக் காட்டிலும் நெருப்பில் வீழ்ந்து இறப்பது நேர்மையாகும் என்று கடுமொழி உதிர்த்துப் போகிறார் ஔவையார். இலக்கியங்கள் பொதுவாக பெண்களைக் குறித்தே பாடி இருப்பினும் கல்வி அறிவு மிகுந்த இக்காலத்திலேயே ஆண்கள் பெண்களைப் படுத்துகிற பாட்டை 'மெல்லவும் முடியாமல் துப்பவும் முடியாமல்' என்பது போல தனக்குள் புதைத்துக் கொள்ளவும் முடியாமல் வெளியிலும் சொல்ல முடியாத வேதனைகளில் ஆழ்ந்திருக்கிறார்கள் பெண்கள் சிலர். இப்படி இருக்கிற போது பண்டைய காலங்களில் ஆண்கள் செய்யும் கொடுமைகளைப் பெண்கள் எப்படியெல்லாம் சகித்துக் கொண்டிருப்பார்கள் என்று நினைத்துப் பார்க்கிற போதே நெஞ்சம் துணுக்குறுகிறது. மனைவியைக் கோல் கொண்டு அடிப்பதுஅறியாமை(திரிகடுகம் 3) என்கிறார்கள் சான்றோர்கள். அவ்விதம் அடிக்கும் கொடூரம் நிறைந்தவன் குற்றவாளி ஆவான்.

தலைமுறை இடைவெளி:

"ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே"-( தொல்-அகத்.54)

இங்கு இளமை தீர்திறமாவது- இளமை நீங்கிய திறத்தின் கண் நிகழ்வது. அது மூவகைப்படும்.

அ. தலைமகன்(கணவன்) முதியனாக இருந்து தலைமகள் (மனைவி)இளையவளாக இருத்தல்

ஆ. தலைமகள்( மனைவி) முதியவளாக இருந்து தலைமகன்(கணவன்) இளையவனாக இருத்தல்.

இ. இவ்விருவரும் இளமைப் பருவம் நீங்கிய வழி அறத்தின் மேல் மனம் நிகழ்தலின்றிக் காமத்தின் மேல் மனம் நிகழ்தல்.

வறுமை:


http://Creativecommons.org//license/by/4.0/.

பெரும்பாலான மண முறிவுக்கு மனம் பொருத்தப்பாடின்மைக்கும் முதன்மையான காரணங்களுள் ஒன்று வறுமையே ஆகும்.

"அன்னம் உணற்குஅரிதாம் ஆமாறு மூன்றும் அரிதாம்
பள்ளம் அரிதாம் பகலின் கண்;- துன்நிசியில்
நேயம் அரிதாகும் நித்திரைக்குப் பாய் அரிதாம்
காயக்கு அரிதாம் கலை"(த.பா.தி.)

வறுமை ஒருவனை வந்து அடையுமானால் உண்பதற்குச் சோறு கிடைப்பது அரிதாகும். பால் ,தயிர், நெய் மூன்றும் கிடைத்தற்கு அரிதாகும். பகற்பொழுதில் வெற்றிலைக் கிடைப்பது அரிதாகும். இருள் நிறைந்த நள்ளிரவில் அன்புடைய காதலி அருகில் இருப்பது அரிதாகும். படுத்துத் தூங்குவதற்குப் பாய் கிடைப்பதும் அரிதாகும் உடம்பினை மறைப்பதற்கு உரிய ஆடை கிடைப்பதும் அரிதாகும் என்கிறார் சுந்தரக் கவிராயர் . வறுமை வந்த குடும்பத்தில் மண வாழ்வும் பொருந்திப் போகும் குணமும் அரிதாகி விடும்.

பெரும்பாலான மனம் முறிவுக்குக் காரணம் வறுமைதான். வறுமை என்பது பொருளின்மை என்பது மட்டுமல்ல வரம்பு மீறியத் தேவை அல்லது தகுதி மீறிய தேவை என்பதாகவும் கொள்ளலாம்.

'ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதி கெட்டு(நல் 25)'

குடும்ப வாழ்க்கை சிதைந்து போகும்.

தம் வருமான நிலை அறிந்துக் குடும்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்ளாதவன் நிலை மிகவும் மோசமடையும். அதிகமானக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதனால் சிலர் தம் வறுமைப் போகும் என நினைக்கின்றனர். குடும்பத்தை மேலும் வறுமைக்கு உட்படுத்துவதோடு குழந்தைகளையும் வறுமைக்குள் தள்ளி விடுகிறது.

"நாப்பிளக்க பொய்யுரைத்து நவநீதியம் தேடி
நலன் ஒன்றும் அறியாத நாரியரைக் கூடி
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர்; கைவிடவும் மாட்டீர்;
கவர் பிளந்த மரத் துளையில் கால் நுழைத்துக் கொண்டே
ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர்! கிடந்துழல அகப்பட்டீரே!"


http://Creativecommons.org//license/by/4.0/.

எனும் இராமலிங்க அடிகளாரின் பாடல் அதிகக் குழந்தைப்பேற்றின் அவலத்தை எடுத்துரைக்கிறது. இவ்வாறான அவல வாழ்வில் துயருற்று உழலுவோரின் மண வாழ்விலும் அதன் தாக்கம் இருக்கும்.

**தீயப் பழக்கங்கள்:**

"கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கால்

உள்ளான்கொல் உண்டதன் சோர்வு"(குறள்-930)

மது அருந்தாது இருக்கும்போது மது அருந்தியவன் செய்யும் செயல்களைப் பார்த்தால் இழிவான அவனது நடத்தை மதுப்பழக்கம் பக்கம் போகவே எண்ணம் வராது.

"நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்

பேணாப் பெருங்குற்றத் தார்க்கு"( குறள்924)

குடிப்பழக்கத்துக்கு அடிமையானவனிடம் வெட்கம் சிறிதும் அண்டாது. பிறரிடம் கைநீட்டி பற்பல காரணமும் சொல்லிப் பணம் பெற்றுக் குடிக்கவே செய்வான்.

"துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்

நஞ்சுஉண்பவர் கள்உண் பவர்"( குறள் 926)

நஞ்சு உண்பவர் வேறு கள் உண்பவர் வேறு என்று பிரித்தறிய முடியாது இரண்டும் ஒன்றே.

"ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்

நன்றெய்தி வாழ்வதோர் ஆறு"(குறள் 932)

பெறுவோம் என்னும் ஆசையில் நூற்றுக்கணக்காக இழந்து நம்மை வறியவனாக்குவதுச் சூதாட்டம்.

" உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்

போஒய் புறமே படும்"(குறள்933)

உருளும் சுவற்றின் மீது கட்டப்படும் பந்தயப் பொருளை இடைவிடாது சொல்லிச் சூதாடுவானாயின் ஈட்டிய பொருளும் வருவாயும் எல்லாம் எதிரிகளிடம் போய்ச் சேர்ந்து விடும் .



http://Creativecommons.org//license/by/4.0/.

இத்தகையக் கொடுமைகளைச் செய்யக்கூடிய கள் , சூது, புகை, புகையிலை , தவறான ஆண் பெண் தொடர்பு இவற்றைக் கைக்கொண்டாரின் குடும்ப வாழ்வுச் சிதைந்துப் பொருந்தாத் துணையாகி வாழ்வின் இன்பம் தொலையும். இணையருக்குள் நம்பிக்கையின்மையை ஏற்படுத்திவிடும். ஆகவே தீயப் பழக்கவழக்கங்களை விட்டு விலகி இருக்கக் கற்றுக் கொள்வோம். குடும்பம், குழந்தைகள் இவர்களோடு மகிழ்ந்திருக்க முயலுவோம். நற்பண்புகளைப் பேணுவோம்.

மணம் முறிவு:

'தான் இருக்கிற அழகுக்கு, தடவிக் கொண்டாலாம் வேப்பெண்ணெயை' எனும் பழமொழிக்கு ஏற்ப சில பெண்களும் ஆண்களும் தங்கள் அழகைத் தாங்களே வியந்து தனக்குத் தன் கணவன் அல்லது நிகர் இல்லை எனும் மாயையில் விழுகின்றனர். இதனால் குடும்பத்துக்குள் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு உடன்பாடு இல்லாத வாழ்க்கையாக அமைகிறது.

'கூடும் குருவில்லா வித்தை குணம் இல்லாப் பெண்டு விருந்தில்லா வீடு விழல்' இசைந்த ஆசிரியர் இல்லாத கல்வியும் நற்பண்புகள் இல்லாத மனைவியும் விருந்தினரை ஓம்பாத குடும்பமும் வீணாகும் என்று கூறுகிறார் ஒளவையார்.

'நோய்கொண்டா லும்கொளலாம் நூறு வயது ஆமளவும்

பேய்கொண்டா லும்கொளலாம் பெண் கொளலாகாதே'

என்று திருமணத்தின் மீதும் பெண் இனத்தின் மீதும் சிவப்பிரகாசர் கூறுவதைப் போல வெறுப்பு தோன்றிவிடும்.

'தாசி வீடு சென்றவனுக்குச் செருப்படி வேண்டும்' ஒழுக்கக்கேடாக நடந்து கொள்ளும் ஆண்களுக்குத் இத்தகைய கடும் மொழியை முன்னோர்கள் பழமொழியாகச் சொல்லி இருக்கிறார்கள். தன் மனைவியைத் தவிர்த்து வேறு ஒரு பெண்ணோடு தொடர்பில் இருக்கும் ஆண்களால் குடும்பத்துக்குள் குழப்பம் ஏற்பட்டு இவர்கள் குழந்தைகளும் அவதிக்குள்ளாகின்றனர்.

பாலினப் பாகுபாடு:

பெண் குழந்தையாகப் பெறும் குடும்பத்தில் ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்பதற்காக வேண்டி வெறுப்பு, மன அழுத்தம் ஏற்பட்டு வாழ நேரிடும் அல்லது மண முறிவு சில போது நிகழக் கூடும். ஐந்து 'பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்' என்பது சிலரிடம் உள்ள மடமொழி. ஐந்தாவதும் பெண் குழந்தை பெற்றால் இறுதியாகப் பிறந்த அக்குழந்தைக்குப் போதும்பொண்ணு என்று பெயர் வைப்பதும் உண்டு. இதே போல ஐந்தாவதும் ஆண் குழந்தையாகப் பிறந்தால் இறுதியாக பிறந்த ஆண் குழந்தைக்குப் போதுராஜா என பெயர் வைப்பதும் உண்டு. இப்படி குழந்தைகளின் பாலினத்திற்காக வேண்டி மண முறிவு ஏற்படுவது தற்காலத்தில் மிகவும்


http://Creativecommons.org//license/by/4.0/.

குறைந்துள்ளது. ஆயினும் அது சார்ந்த மன அழுத்தங்கள் அதிகப் பெண் குழந்தைகள் பெற்ற தாய்மார்கள் குடும்பத்தில் இன்றும் உள்ளது. 'மூன்றாவது பெண் குழந்தை பிறந்தால் முற்றமெல்லாம் பொன் கிடைக்கும'என்றும் 'சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை வேண்டும்' எனும் மனநிலையே இந்நிலைக்குக் காரணமாக அமைகிறது. 'சேர சேரப் பண ஆசை, பெறப் பெறப் பிள்ளை ஆசை' என்பதை எண்ணிப் பார்த்து அளவோடு பெற்று வளமுடன் வாழ்வதே சிறந்ததாக அமையும்.

**துணையை ஏமாற்றுதல்:**

மனைவியோ அல்லது கணவனோ உயிருடன் இருக்கும் நிலையில் அவர்களுக்குத் தெரியாமல் இரண்டாவது மணம் செய்வது ஏற்புடையது அன்று.

" மின்னிழைப்புதல்வனை வாயில் கொண்டு புகினும்”(கற் 31)

முதல் மனைவி தன் மகனைக் கோலம் செய்து பின்முறை மனைவியிடம் கொண்டு செல்லினும் என்பதால் முதல் மனைவிக்குப் பிள்ளை இல்லாமையால் இரண்டாவது ஒருத்தியை மணந்து கொண்டதாக தெரியவில்லை. சில செல்வர்களிடம் அன்றும் இருந்தது. இன்றும் சிலரிடம் இருக்கிறது. இது இன்றைய பொழுதில் குற்றச் செயலாகும்.

'இருதாரம் ஒரு நாளும் கொள்ள வேண்டா'

என்று மூதுரை இத்தகா ஒழுக்கத்தைக் கூறி உள்ளது. இவ்விரு மனைவியரும் அல்லாமல் அவன் பரத்தை மாட்டும் தொடர்பில் இருந்திருக்கிறான். இவ்வகையான கூடா ஒழுக்கம் குடும்ப வாழ்வை நிலைகுலையச் செய்து விடுகிறது."நிரப்பிடும்பை பல்பெண்டிர் ஆளன் அறியும்"((நா.ம.கடிகை. பா.95) வறுமைத் துன்பத்தைப் பல பெண்களை மணந்தவன் அறிவான் என்கிறார்கள். துணை ஏமாற்றுவான் தான் வறுமையுறுவதோடு தன் குடும்பத்தையும் வறுமையில் தள்ளிவிடுவான்.

**மண வாழ்க்கை சிறக்க:**

"வெண்ணெய்க் கட்டியும் சீனியும் ஊட்டலாம்
விக்கிக் கொள்வதற்கு என்செய்யலாம்? ஒரு
பெண்ணைக் கட்டிக் கொடுத்திடலாம்; பிள்ளை
பெறுவதற்கு உடன்படு வார்களோ?
பண்ணைக் கட்டிய மென்மொழியாலும் தம்
படுக்கை வீட்டில் வந்தாளே; அவன் தன்னைக்
கண்ணைக் கட்டி அணையாமல் ஏன்விட்டீர்
கழனி சூழும் பழனியில் வேலரே"!(த.பா.தி)


http://Creativecommons.org//license/by/4.0/.

ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்து விடலாம்; குழந்தைப் பெறுவதற்கு உடந்தையாய் இருக்க முடியுமா? என்று இராமசந்திரக் கவிராயர் வினவுவதன் வாயிலாக திருமணம் தான் பெரியோர்கள் செய்து வைப்பார்கள். திருமண வாழ்வில் மேலும் சிக்கல்களைத் தீர்த்து, கணவன் மனைவி ஒருவருக்கொருவர் உடன்பட்டு விட்டுக் கொடுத்து வாழ்வை அழகாக்கிக் கொள்வது இளையோர் கடமையாகும்.

பொருந்தாத் துணையும் பொருந்தி வர:

நமக்குக் கிடைத்த வாழ்க்கையை ஏற்றுக் கொண்டு அதனைத் தனக்கு ஏற்றமாதிரி மாற்றிக்கொள்ளுதல் அல்லது கிடைத்த வாழ்க்கைக்கு ஏற்ப தம்மை தகவமைத்துக் கொள்ளுதல் சிறந்தது.

1. மனைவியைப் புகழ்தல்

"வாச மனையாளைப் பஞ்சணையில்; மைந்தர் தமை நெஞ்சில்; வினையாளை வேலை முடிவில்" (த.பா.தி)புகழ்வது சிறப்பை தரும்.

எனவே கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் புகழ்ந்து பேசி மகிழ்வது இல்லறத்திற்குத் துணை புரியும்.

2. நல்ல கணவன்

கவியாகு மாதினைப் பெற்றோன் புலவன்
கற்றோன் அனையாம்
செவியாரக் கேட்டங்கு உணர்வான்
சகோதரன்; செந்தமிழ்க்கு
உதவியாய் அருமை அறிவான் பதி
அவன் தான் இலையேல்
புவியாகு மண்ணுக்குள் என்பலமாம்?
கலைப் பூங்கொடிக்கே!(த.பா.தி)

இது பலபட்டடை சொக்கநாதப் புலவர் பாடல். கவிதைக்கு மட்டுமன்று வாழ்க்கைக்கும் தான். மனைவிக்கு உதவியாகவும் அவள் அருமை உணர்ந்தவனாகவும் கணவன் திகழ வேண்டும்.

3.நல்ல மனைவி

"அன்னை தயையும் அடியாள் பணியு,மலர்ப்

பொன்னின் அழகும் புவிப்பொறையும்- வன்னமுறும்


http://Creativecommons.org//license/by/4.0/.

வேசி துயிலும், விறல்மந் திரிமதியும்

பேசில் இவைஉடையாள் பெண்"

தனது கணவனைப் பரிவுடன் பேணுவதில் அன்னையைப் போன்ற அருள் உள்ளமும் கணவனுடைய கட்டளையைக் கேட்பதில் அடிமை போன்ற தாழ்மையும் தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளைப் போன்ற பேர் அழகும் பூமாதேவியைப் போன்ற பொறுமையும் நயமாக பேசுவதில் வல்ல விலை மகள் போலவும் அமைச்சர் குரிய அறிவும் வாய்க்கப் பெற்றவளைச் சிறந்த மனைவி என்றுக் கூறலாம் என்கிறார் வேதநாயகம். இப்பாடலை காணுகிற போது வடமொழி பாடல் ஒன்றைப் போல் உள்ளது. மேலே உள்ள கருத்துக்களில் ஒப்பக்கூடிய கருத்துக்களை ஏற்று அதன்படி மனைவி நடந்தால் சிறப்பாக இருக்கும்.

4. உலக இயல்பு உணர்தல்

"முன்னாள் இருவருக்கும் யாக்கை
ஒன்றாக முயங்கினமால்
பின்னால் பிரியன் பிரியை என்று
ஆயினம் பேசலும்
இந்நாள் கொழுநன் மனைவி என்று
ஆயினம் இன்னமும் ஓர்
சின்னாளில் எப்படியோ ஐய
நீ இன்று செப்புகவே"(த.ப.தி)

உலக இயற்கைக்கு ஏற்ப கணவன் மனைவி ஆகிய இருவர் இடையே தங்கள் பருவத்திற்கு உகந்த மனநிலை அமைய வேண்டும் என்பது மேலே கண்ட பாடல் வழியாக அந்தகக்கவி வீரராகவர் வெளிப்படுத்துகிறார்.

5.இன்ப வாழ்க்கை :

"தீண்டா முந்நாளு நோக்கார்நீ ராடியபின்
ஈராறு நாளு மிகவற்க வென்பவே
பேரறிவாளர் துணிவு"( ஆசாரக் கோவை42)

பூப்புநாளும் அதன் முந்தைய மூன்று நாளும் உடலால் நோக்காரேத் தவிர உள்ளன்பால் உள்ளப் புணர்ச்சி கிளர்ந்தெழும் பிந்தைய நாட்கள் உள்ள புணர்ச்சியோடு உடன் புணர்ச்சியும் ஏற்கும் காமம் என பொது அறமாக இல்லறத்தாருக்கு உணர்த்த முற்பட்டு இருக்கிறார்கள் சான்றோர்கள். அதை உணர்ந்து வாழ்வில் கடைப்பிடித்தால் பொருந்தாமல் இருந்த துணையும் பொருந்தி வருவர்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**துணை இழந்தார் நிலை:**

"அல்லொடு நண்பக லைம்புல னாலரும் போகந்துய்த்து
வல்லியு மல்லல் வளவய லூரனு மாதருமே
சொல்லிய கேள்வித் துறைமுடி வாய்ந்து துணைவியரோ
டில்லறங் காத்துத் துறவறந் தாங்க லியைந்தனரே"( அம்பிகாபதி கோவை 30)

மக்களோடு மகிழ்ந்து மனையறம் காத்து மிக்க காம வெட்கை தீர்ந்து தலைவனும் தலைவியும் தன் இடத்தை விட்டு நீங்கி துறவறம் காத்தல் தம் வயது முதிர்ந்த நாட்களில் நடைபெறக்கூடிய ஒரு செயலாகும். ஆனால் இளம் வயதில் தம் துணை இழந்தவர்கள் தம் காமுறு நெஞ்சத்தை அடக்கி வாழ்தல் வேண்டும் என்பது சமுதாயத்தால் விதிக்கப்பட்டது. அதிலும் குறிப்பாக பெண்களே பாதிக்கப்படுகின்றனர்.

**துணை இழந்த பெண்களின் நிலை:**

பண்டைய காலத்தில் மனைவி போர்க்களத்திற்குச் செல்லுதல் உண்டு. கணவன் பெரும் புண்ணுற்றுக் கிடந்த வழி அவனைப்பேய் தீண்டாத படி அவன் மனைவி காத்து நிற்பாள். கணவன் வேல் பட்டு இறந்து கிடப்பானானால் அவ்வேலைப் பிடுங்கிக் குத்திக்கொண்டு தான் மாய்ந்துபடுதலும் உண்டு. போர்க்களத்தே வீரன் உடல் அகப்படாமல் தலை மட்டும் காணக்கிடத்தல் உண்டு. அது கண்ட தலைவி ஆற்றாமை மிகுதியால் அத்தலையை மார்பிலும் முகத்திலும் அணைத்துக் கொண்டு அவனையே நினைத்து அரற்றி உயிர் நீத்தலும் உண்டு(புறத்.24). கணவன் இறந்தவழி துயரம் தாங்காமல் உடலுயிர் துறத்தல் உண்டு. இது உழுவலன்பு பற்றி நிகழும் சாக்காடாதலின் முதானந்தம் எனப் பெயர் பெறும். கணவன் இறந்தபோது உடன் உயிர்ப் போகாதாயின் மனைவி தீ வளர்த்து அதனிற் தீப்பாய்ந்து அவனோடு செல்ல உயிர் விடுதல் உண்டு. இது பாலை நிலை எனப்படும்.

"ஐயோ எனின் யான் புலி அஞ்சுவலே
அணைத்தனன் கொளினே அகன்மார்பு எடுக்கவல்லேன்
என்போல் பெருவிதிர்ப்பு உருக நின்னை
இன்னாது உற்ற அறனில் கூற்றே"( புறம் 255)

போரில் இறந்துபட்ட தலைவனின் உடலைப் பார்த்து தலைவி ஐயோ என கதறினால் காட்டில் உள்ள புலி வந்து விடுமோ என அஞ்சுகின்றேன். தூக்கி எடுத்துச் செல்லலாம் என்றால் அகன்ற மார்பு கொண்ட உன்னைத் தூக்கவும் இயலாது. துன்புறும் வண்ணம் செய்ததே கூற்றம் என்னைப்போல் துன்புறட்டும் என்று நொந்து கொள்வதைத் தவிற வேறு என்ன செய்ய முடியும் அந்த கையறு நிலையில் உள்ள பெண்கள்.


http://Creativecommons.org//license/by/4.0/.

"அமரர்க்கு அரசன் தமர் வந்து ஈண்டி அவள் காதல் கொழுநனைக் காட்டி" என்று இந்திரன், இறந்த கோவலனை கண்ணகியிடம் காட்டி அழைத்துச் செல்வதெல்லாம் வியப்புக்குரிய கதைகள் தாமே! நடைமுறை வாழ்க்கைக்கு அவைப் பொருந்தாமையும் காண்க.

"சிலைக்கடமா மரக்குயிலே ஒடுக்கு; கடல்
தொனிஅடக்கு! தென்றல்தேரை
விலக்கடமா மதப்பயலே! தலைக்கடைவா
சலைக்கடக்க வெருட்டுவனே!"

அழகுமிக்க மன்மதப் பயலே! சிறிய சோலையில் உள்ள மாமரத்தில் அமர்ந்து கூவுகின்ற குயிலைக் கூவாது அடங்கும்படி செய்! கடலின் ஓயாத ஓசையை அடக்கு இளம் தென்றலாகியத் தேரை இங்கே ஓட்டி வராமல் இருப்பாயாக என்னுடைய வீட்டின் தெரு வாசலை விட்டு அப்பால் செல்லும்படியாக உன்னைத் துரத்தி விடுவேன் என்று எச்சரிக்கைச் செய்கிறேன் என்கிறது இப்பாடல். தலைவனைப் பிரிந்து இருக்கிற தலைவிக்கு மட்டும்தான் இத்தகைய உணர்வுகள் எழுமா! துணை இழந்து இருக்கின்ற ஒருத்திக்கு இத்தகைய உணர்வு எழாதா! எழுந்தாலும் வெளிச்சொல்ல இச்சமூகம் அனுமதிப்பது இல்லை. துணை இழந்து விட்டாலே பெண் அனைத்து ஆசைகளையும் துறந்துத் துறவிக் கோலம் போடும் படியான வாழ்க்கை தான் வாழ்ந்திருக்கிறாள்.

கணவனை இழந்த பெண் அக்காலத்தில் உடன்கட்டை ஏறும் பழக்கம் காணப்பட்டது . இது அரச குடும்பத்தினரிடமும் பொதுமக்களிடமும்(பத்தினித் தெய்வ வணக்கம்) காணப்பட்டுள்ளது. பூத பாண்டியன் பெருங்கோப்பெண்டு தீ புகுந்ததைப் புறநானூறு பேசியுள்ளது. சான்றோர்கள் இதனைத் தடுக்க முற்பட்டு உள்ளனர். எனவே உடன்கட்டை ஏறுதல் அரிதாகவே தமிழகத்தில் நடந்துள்ளது . 'கைம்மை யுய்யாகாமர் மந்தி கல்லா வன்பரல் கிளைமுதற் சேர்த்தி' என்பதனால் கைம்மை நோன்பு நோற்கும் வழக்கமும் பெண்கள் மேற்கொண்டு இருந்தனர். கைம்பெண்கள் நெய் உண்பதில்லை. தண்ணீர்ச் சோற்றை எடுத்துக்கொண்டு அதனுடன் அரைத்த எள்ளையும் புளியையும் கூட்டி வெந்த வேளைக் கீரையுடன் அவர்கள் உண்ணுவர். கைம்பெண்கள் பாய் மேல் படுப்பதில்லை வெறும் தரையில் மேல் தான் படுத்து தூங்கினர். இவர்கள் தலையை மழித்துக் கொள்ளும் வழக்கமும் உண்டு தலையை மழித்து முக்காடிடுதல் வெள்ளாடை அணிதல் மங்கள நாண், நெற்றிப் பொட்டு, மஞ்சள் பூச்சு, மலர் சூட்டுதல் போன்றவற்றை தவிர்த்து வாழ்ந்துள்ளனர். (10). மறுமையில் கணவனை அடைய இந்நோன்பு உதவும் என்று நம்பினர்.

'வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்
மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிர்'(குறுந் 135)


http://Creativecommons.org//license/by/4.0/.

ஆண்களுக்கு அவர்களின் வினை (செய்யும் வேலை) தான் உயிரைப் போன்றது. வீட்டில் வாழும் பெண்களுக்கோ அந்த ஆண்கள் தான் உயிர் போன்றவர்கள் என்று கருதுமக் காலத்தில் ஒரு பெண் கணவனை இழந்தால் எத்துணை பெரும் துயரத்தை அவள் பெற்றிருப்பாள்

'நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபாலை'(தொல் 1024)

என்கிறாரே தொல்காப்பியர். அத்தகையப் பெண்களின் அகத் துன்பங்களைப் பாடு பொருளாகக் கொண்டு பாடினார் இல்லை.

மணிமேகலை ஆதரைப் பிச்சை இட்ட பாதையில் கணவன் இறந்தான் எனக் கூற கேட்ட ஆதிரை

"சாதுவன் தானும் சாவுற்றான் என
ஆதிரை நல்லாள் ஆங்குஅது தான்கேட்டு
ஊரீ ரேயோ ஒள்அழல் ஈமம்
தாரீ ரோஎனச் சாற்றினள் கழறிச்(25)
சுடலைக் கானில் தொடுகுழிப் படுத்து
முடலை விறகின் முளிஎரி பொத்தி
மிக்கஎன் கணவன் வினைப்பயன் உய்ப்பப்
புக்குழிப் புகுவேன் என்றுஅவள் புகுதலும்"

என்ற அவள் தீப்புகுந்தாள் என்பதையும் அசரீரி தோன்றி சாதுவன் இறக்கவில்லை ' நக்க சாரணர் நாகர்வாழ் மலை பக்கம் சார்ந்தனன்' கூறியதைப் போல மற்ற பெண்களுக்கு நிகழ்ந்திருக்குமா! எத்தனையோ பெண்கள் கணவன் இறந்தான் என்ற செய்தியைப் பிறர் கூறக் கேட்டுத் தீ புகுந்து தம் உயிரை விட்டனரோ!.

முதுபாலை- கணவனை நிரந்தரமாக பிரியும் நிலை, கணவனை இழத்தல்

காம்புயர் கடத்திடைக் கணவனை இழந்த

பூங்கொடி மடந்தை புலம்பு உரைத்தன்று

மூங்கில் நிறைந்த பாலை நிலத்தில் எதிர்பாரா வகையில் கணவனை இழந்த தலைவியின் தனிமையைக் கூறுவதே இத்துறையாகும்.

"நீர்மலி கண்ணோடு நின்றேன் நிலை இரங்காய்

..................................

வெண் சுரத்து கொள்ளல் நீ கோடல் கோடல் கொடிதே"



http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

பேய் மகளே விளாம் பழங்கள் உதிரும் இக்கொடிய பாலையில் கணவன் இறக்க பிணத்தை வைத்து புலம்பும் என் துயர் கண்டு இறங்காமல் அவன் உடலை உன் உணவுக்காக கைப்பற்ற முயலும் உன் செயல் மிகக் கூடுது என்கிறாள் ஒருத்தி. அவளது தனிமை கொடுமையை எண்ணி பாருங்கள்.

தாபத நிலை- கைம்மை நிலை

தவம் இருப்பவரைப் போல ஐம்புலனின் ஆசை அடக்கி வாழுதல்

"குருந்தலர் கன்னிக் கொழுநன் மாய்ந்தெனக்
கருந்தடங் கண்ணி கைம்மை கூறின்று"

மாலை நிலை- மாலை நேரத்தில் கணவனோடு நெருப்பில் புக மனைவி நிற்கும் நிலை( உடன் தீப்புக நிற்றல்)

"கதிர்வேல் கணவனொடு கனைஎரி முழுக
மதிஏர் நுதலி மாலை நின்றன்று"

மூதானந்தம்- கயல் விழிகளை உடையவள் தன் கணவன் இறந்த உடனே தானும் இறந்துவிட கண்டோர்கள் வியந்து சொல்லியது இத்துறை.

"கயல் நீர் கண்ணி கணவனொடு முடிய
வியல் நெறிச் செல்வோர்
வியந்துரைத் தன்று"

ஆனந்தப் பையுள்- வீரனுடைய உயிரோடு தன் உயிர் செல்லாது இங்கு தங்கி இருப்பதாக வருந்தி உரைப்பது இத்துறை ஆகும்.

கணவன் இறந்த பிறகு மனைவி மேற்கொள்ள முடிவுகளைக் கொண்டு தலையன்பு இடையன்பு கடையன்பு என்று வகைப்படுத்தியுள்ளனர் பண்டைய காலத்தார்.

"காதலர் இறப்பின் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்கா
தின்னுயிர் ஈவர்; ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்
நளியெரி புகாஅ ராயின் அன்பரோ
டுடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர் பத்தினிப்பெண்டிர்"

(மணிமேகலை-2:427)

கொல்லன் உலைத்துருத்திக் காற்றை வெளி விடுவது போல உயிரை விடுவர். குளத்தில் குதிப்பதைப் போல தீயில் குதிப்பர். உடம்பு அடுவர்- உடம்பை வருத்துவர். வெள்ளரி விதை



http://Creativecommons.org//license/by/4.0/.

போன்ற கொட்டை அரிசியால் ஆகிய பழைய சோற்றைப் பிழிந்து போட்டு, உப்பில்லாத குழம்புடன் ஒருவேளை உண்டு பரற் கற்களைப் பரப்பி அதன் மேல் விரிப்பு இல்லாமல் படுத்தும் உடலை வருத்தி வாழ்ந்தனர்(புற-246).

தலையொடு முடிதல்- இறந்த கணவன் தலையைத் தழுவியப்படியே மனைவி உடன் உயிர் நீத்தல்.

பூசல் மயக்கம்- பெரும் புகழோடு இறந்த ஒருவனைப்பெண்டிர் பலர் சூழ்ந்து நின்று ஆரவாரத்துடன் அழுதல்(ஒப்பாரி வைத்தல்)

தாங்கரும் பையுள்-கண்டோர் பொறுத்தற் கரிய பெருந்துன்பங் கொள்ளும் படி, சுற்றத்தாரின்றி,மனைவி இறந்த கணவனிடம் இருந்து அழுவது.

இராவணன் இறந்ததும் அவன் கோப்பெருந்தேவியாகிய வண்டார் குழலி உடன் உயிர் நீத்ததும், கோவலனை கொன்றது குற்றம் என கண்டதும் பாண்டிய நெடுஞ்செழியன் உயிர் விட்டதும் அவன் கோப்பெருந்தேவி உடன் உயிர் விட்டதும் தலை அன்பிற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும் பூதப்பாண்டியன் இறந்ததும் கோப்பெரும்பெண்டு என்னும் அவனது கோப்பெருந்தேவியர் யார் தடுக்கும் கேளாமல் உடனெரி புக்கது(புறம்-246) இடையன்புக்கு எடுத்துக்காட்டாகும்."நல்லோள் கணவனுடன் நனியழற் புகீஇச் சொல்லிடையிட்ட பாலை நிலை" (புறத்-24 ) என்பர் தொல்காப்பியர். இவ்விதம் உயிர் விட்ட பெண்களை கடவுளாக வழிபட்டுள்ளனர். கடையன்பு என்பது கைம்மை நோன்பு ஆகும். இவ்விதம் எல்லாம் கணவன் மீதுமனைவி வைத்திருந்த அன்பை வகைப்படுத்தி இருந்தார்கள் முன்னோர்கள். கணவன் இறந்த பிறகு உயிர் விடுதலையோ கைம்மை நோட்பதையோ மேலே கண்டவாறு அன்பை பாகுபடுத்துவதோ இக்காலத்தில் ஏற்புடைய ஒன்றல்ல. கணவன் இறந்த பிறகு சமூக மதிப்பிழப்பு, குடும்பத்தில் உள்ள நாத்தனார் உள்ளிட்டோருடைய கொடுமை, ஒவ்வொன்றிலும்( விழாக்கள் உள்ளிட்டவற்றில்) ஒதுக்கி வைத்தல் முதலியவாறு அன்றைய சமூகத்தில் நிகழ்ந்த சொல்லொன்னாத் துயரங்களுக்கு அஞ்சி பெண்கள் உயிர் விடும் முடிவை எடுத்துள்ளனர் போலும். இன்று வேலைக்குச் செல்லாத பெண்கள் தன் கணவனிடம் பணம் கேட்கிற போது கூனிக் குறுகிப் போய் விடுகிறவர்கள் உண்டு. பண்டைய காலத்தில் கணவனே இல்லை என்றால் அவர்கள் நிலை மோசமானது. கணவன் இறந்த பெண்கள் கைம்மை நோற்காமல் மறுமணம் செய்து இழந்த வாழ்வை மீட்டுக் கொள்ள வேண்டும்.

துணை இழந்த ஆண்கள்:

"தாயோடு அறுசுவைபோம்; தந்தையோடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போல்;- ஆயவாழ்வு
உற்றார் உடன்போம்; உடன்பிறப்போடு தோள்வலிபோம்
பொற்றாலி யோடுஎவையும் போம்"(த.பா.தி)


http://Creativecommons.org//license/by/4.0/.

தாய் இறக்கும் பொழுதே அறுசுவைப் பொருள்களின் சுவை ஒருவனை விட்டு நீங்கிவிடும். தந்தை போகும்போதே கல்வியும் போய்விடும். குழந்தையோடு தான் அடைந்துள்ள செல்வ பெருமையும் நீங்கும். சுற்றத்தாருடன் உண்டாகியுள்ள வாழ்க்கை நீங்கும். உடன் பிறந்தாரோடு தோள்வலிமை போய்விடும். மங்கல நாணுக்குரிய மனைவியுடன் எல்லா நலன்களும் நீங்கிவிடும் என்கிறது இப்பாடல். ஒருவன் தன் மனைவியை இழந்துவிட்டால் அனைத்தையும் இழந்தவன் ஆகிறான்.

" மாதரின்றி வாழின் மதன்பகையா; நாமணம் செய்
காதலியர் மீதுபகை காலனாம்;-பூதலத்தில்
கள்ளமின் னாரைக்கூடில் கத்தன்பெரும் பகையாம்
உள்ளமே வேறென் செய்வோம்"

பெண்களோடு கூடாமல் வாழ்ந்தால் மன்மதனுடைய பகைமை உண்டாகிறது. நாம் திருமணம் செய்து கொண்ட மனைவி மீது எமன் பகைமை கொள்ளுகின்றான்; உலகத்தில் பொது மகளிரைக்கூடினால் கடவுளுடைய பெரிய வெறுப்பு ஏற்படும். மனமே வேறு என்ன செய்யலாம்? என்று மனைவியை இழந்த ஒருவனுடைய நிலை குறித்து வேதநாயகம் பிள்ளை தன் தனிப்பாடலில் குறித்துள்ளார். அவரே மேலும்

"நீயாவி நானுடல்; நீபோனாய்; நான் இருந்தேன்;
மாயாமல் வெற்றுடம்பு வாழுமோ?- தூயாளே
நானோநா னல்லவோ? நாட்டினான் வேறொருவன்
தானோஈ தென்னநவம் சாற்று"

தூய்மை பொருந்தியவளே! நீ உயிர்; நான் உடம்பு. நீ இறந்து போனாய்; நான் உயிரோடு இருக்கின்றேன். உயிர் இல்லாத உடம்பு அழியாமல் பிழைத்து இருக்குமா என்றெல்லாம் துணை இழந்த ஒருவன் புலம்புவதாக இப்பாடல்கள் அமைந்துள்ளன.

சுரநடை- பாலை வழியில் மனைவியை இழந்த கணவனின் துயர் நிலையைக் கூறுவது சுரநடை

"முதுஅரில் நிவந்த முதுகழைஆரிடைக்
காதலி இழந்த கணவன் நிலை
உரைத்தன்று"

நெருப்பு மூட்டியது போன்ற வெப்பமிக்க பாலையில் வஞ்சனையாக என் மனைவியின் உயிரைக் கைப்பற்றிய கூற்றுவனே! என் கண்முன் வந்தால் என் கை வேலால் உன்னை மாய்ப்பேன் என்று தலைவன் துயரோடு புலம்பிச் சொல்லியது.

தபுதார நிலை- மனைவியை இழந்த நிலை

"புனைஇழை இழந்தபின் புலம்பொடு வைகி


http://Creativecommons.org//license/by/4.0/.

மனையகத்து உறையும் மைந்தன் நிலை
உரைத்தன்று"

நகையணிந்த மனைவியை இழந்து தனிமையில் வீட்டில் துன்புறும் ஆண்மகன் நிலையைக் கூறுதல் இத்துறை ஆகும்.

"கண்டு கேட்டு உண்டு உயர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒன்றோடி கண்ணே உள"

எனும் குறள் காமம் ஐம்புலனாலும் பெறப்படும் இன்பம் என்பதைக் கூறுகிறது. மனைவியை இழந்த ஒருவன் 'புலன் ஐந்தும் வென்றான் தன் வீரமே வீரம்' எனும் வாக்கிற்கு இணங்க ஐம்புலன்களை அடக்கி காமுறு இச்சையைத் தன்னுள் ஒடுக்கி வாழ வேண்டியது உள்ளது. இளமைப் பருவத்தினன் எனின் மறு திருமணம் செய்து கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது.

மறுமணம்:

தமிழ் நாவல்களில் கூட முதன்மை கதை மாந்தர் மறுமணம் செய்வதாக காட்டாமல் துணைக் கதை மாந்தர்கள் மறுமணம் செய்வதாகக் காட்டியுள்ளனர்.

உலகியலில் பெண்ணின் அழகு,முதல் மனைவிக்கு குழந்தையின்மை, குழந்தை வளர்ப்பு,மூத்த மனைவியின் மன நோய், முத்தம் மனைவியிடம் வெறுப்பு, தன் உடல் வலிமையைக் காட்டும் எண்ணம், முறைப் பெண்ணை மாற்றான் மணக்க கூடாது என்ற எண்ணம், விட்டுச் சென்ற குழந்தைகளை வளர்க்க ஒரு தாய் ஆண்களுக்கு மறுமணக் காரணங்களாக அமையக் காண்கிறோம்.

பெண்களுக்கு குடும்ப வறுமை, அதிக வயதாகியும் திருமணம் ஆகாமை, பகட்டான வாழ்வில் ஆசை, ஆணின் மூத்த மனைவி தன் தமக்கை ஆதலால் பிள்ளைகளை வளர்க்கவும் இவ்வகையான காரணங்களால் ஒரு பெண் இரண்டாவது மனைவியாகக் காரணங்களாக இருக்கக் காண்கிறோம்(11).சமுதாய மாற்றத்தினால் மேலே கண்ட ஆண்களின் மறுமண காரணங்கள் பெண்களுக்கும் தற்போது பொருந்தி பெண்களும் ஆண்களைப் போலவே மறுமணம் செய்து கொள்கின்றனர்.

கவலைப் பொதுவானது

“ பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பார்க்கும்
பருக்கை அற்ற
கூழுக்குப் போட உப்பு இல்லை என்பார்க்கும் முள்
குத்தித் தைத்த
காலுக்குத் தோல் செருப்பு இல்லை என்பார்க்கும்


http://Creativecommons.org//license/by/4.0/.

கனக தண்டி
மேலுக்குப் பஞ்சனை இல்லை என்பார்க்கும்
விசனம் ஒன்றே"(த.ப.தி)

ஆக வாழ்க்கையில் துன்பம் துயரம் கவலை அனைத்தும் எல்லோருக்கும் பொதுவானதே. அவற்றிலிருந்து விடுபடும் வாய்ப்பு இன்னது எனக் கண்டு தம் வாழ்வை அமைத்துக் கொள்வார் இன்பம் அடைவார்.

"ஈதலறம் தீவினை விட்டு ஈட்டல் பொருள் எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு
பட்டதே இன்பம்"

எனும் அவ்வையின் வரிகளை நினைவில் கொள்வோம்.

அவ்விதம் கருத்தொற்றுமை ஏற்படாதோர் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு பிரிந்து வேறு ஒரு துணையைத் தேர்வு செய்து மறுமணம் செய்து கொள்வதுச் சிறப்பானது.

1. சட்டப்படி மண முறிவு பெற்ற பிறகே மறுமணம் செய்து கொள்ளல் வேண்டும்.

2. முதல் துணை உயிருடன் இருக்கும் போது மறுமணம் செய்து கொள்ளுதல் குற்றம்

3. தொடர்ந்து ஏழு ஆண்டுகள் எவ்வித தொடர்பும் இல்லாதவர் அல்லது காணாமல் போனவராக அறிவிக்கப்பட்டால் நீதிமன்றத்தால் ஆணை பெற்று மறுமணம் செய்தல் வேண்டும்.

ஐந்திணையில் சொல்லப்படாத மறுமண வாழ்க்கை போன்ற வாழ்வியல் முறைகள் பெருந்திணையின் பாற்படும். ஆனால் பெருந்திணை பாடுவதில் புலவர்கள் யாரும் ஆர்வம் காட்டவில்லை. நலந்துவனார் மட்டுமே பெருந்திணைப் பாடல்கள் சிலவற்றைப் பாடியிருக்கிறார். அவையும் வாழ்க்கை முறைகள் தான் என்பதையும் மக்களின் அன்றாட வாழ்வியல் முறைகள் என்பதையும் ஒப்புக்கொள்ளும் காலம் இது. திருமணமான பிறகும் உடன்பாடு இல்லாததால் தனித்திருத்தல், உடல் குறைபாடு உடையோர், வயது முதிர்ந்து திருமணமாகாமல் இருப்பவர், ஆதரவில்லாமல் இருப்போர், நிறத்தாலும் உருவத்தாலும் இன்ன பிறவற்றாலும் திருமணம் ஆகாமல் இருப்பது போன்றவற்றை இன்றைய சமூக அவலம் என இக்கட்டுரை கருதுகிறது. 'ஆளுக்கொரு இணையர் அனைவருக்கும் வேண்டும்' அனைவருக்கும் கிடைத்திட வேண்டும். பெருந்திணைப்பற்றி பேசப்பட வேண்டும்.

முடிவுரை:

தமிழ் இலக்கிய நெடும்பரப்பில் ஆண்களின் பலதார மணம் குறித்தும் கூடா ஒழுக்கம் குறித்தும் இலக்கியங்களில் பதிவுகள் இருந்தாலும் அவ்வகையான ஆண்களைப் பெண்கள் பொறுத்துக் கொள்ளுதல், ஏற்றுக் கொள்ளுதல் என்பதாகவே அன்றைய கால சமுதாய நிகழ்வுகள்


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

இருந்திருக்கின்றன என்பதைப் பற்றி அறிய முடிகிறது. அதே நேரத்தில் துணை இழந்தாரின் மறுமணம் குறித்தோ குறிப்பாக பெண்களின் மறுமணம் குறித்தோ அவர்களின் அக உணர்வுகள், ஆசைகள், ஏக்கங்கள் எதுவும் முறையாக பதிவு செய்யப்படவில்லை. "பல்லார் அறியப் பறைபறைந்து நாள்கேட்டுக், கல்யாணம் செய்து கடிபுக்க"(நாலடி 85) நடந்த திருமணங்கள் சில வெற்றிகரமாகப் பயணிப்பதில்லை. இக்கட்டுரையின் வாயிலாக இலக்கியங்களில் பொருந்தாத துணை உடையவர்களைப் பற்றியும், துணை இழந்தார் பற்றியும் அவர்களுடையத் துன்பங்கள், மன இயல்புகள், இன்றையக் காலநிலையில் மறுமணம் செய்ய வேண்டிய அவசியம் இவற்றை இக்கட்டுரைப் பதிவு செய்துள்ளது என்பது திண்ணம்.

"எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே"

பார்வை நூல்கள்:

1. தனிப்பாடல் திரட்டு, கலைச்செல்வி(தொகுத்துரை ஆசிரியர்), மூன்றாம் பதிப்பு: நவம்பர் 1977, மத்திய (அரசு சலுகை விலையில் வழங்கிய தாளினால் இப்புத்தகம் அச்சிடப்பட்டது), மீனாட்சி பதிப்பகம், கீழ இராசவீதி: : புதுக்கோட்டை.
2. நீதி நூல்கள் (முதல் தொகுப்பு), தமிழறிஞர் கா. நமச்சிவாயர், முதல் பதிப்பு 2004, வெளியிடுவோர்: எம். கலைவாணன், மனை எண்- 9, கதவு எண் 26, முதல் தளம், சோசப் குடியிருப்பு, ஆதம்பாக்கம், சென்னை-600088
3. தமிழ் எங்கள் உயிர், முத்து இராசக்கண்ணனார் எம்.ஏ., பி. ஓ. எல், தலைவர், இந்திய மொழிப் பகுதி, மலாயாப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர், வெளியீடு 41, முதல் பதிப்பு: டிசம்பர் 1959, வள்ளுவர் பண்ணை, 137, பிராட்வே-சென்னை -1.
4. அம்பிகாபதி கோவை, சென்னை பச்சையப்பன் கல்லூரி உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் வித்துவான்,மீ.பொன். இராமநாதன் செட்டியார் எழுதிய உரையுடன், முதல் பதிப்பு ஜனவரி 1952, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் திருநெல்வேலி 6:: சென்னை -1..
5. நந்திக்கலம்பகம், பெருநாவலர், பேராசிரியர் பு.சி. புன்னைவனநாத முதலியார், கழகப் புலவர்,செல்லூர்க்கிழார் செ.ரெ. இராமசாமிபிள்ளை இவர்கள் எழுதிய உரையுடன், கழக வெளியீடு:789 ,மறு பதிப்பு மே 1961 031,IDN K 1, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் திருநெல்வேலி 6, சென்னை -1
6. பயனுள்ள பழமொழிகள் 2500, தொகுப்பு: இரா. சம்பத், பதிப்பு: ஆகஸ்ட் 2016, காளீஸ்வரி பதிப்பகம்,4/2, சுந்தரம் தெரு,( நடேசன் பூங்கா அருகில்) தியாகராயர் நகர், சென்னை-600017.
7. தொல்காப்பியச் சிந்தனைகள், தமிழ்த் துறை ஆசிரியர்கள், முதல் பதிப்பு: 1978,( பல்கலைக்கழக மானியக் குழு உதவி வெளியீடு), அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.


http://Creativecommons.org//license/by/4.0/.

8. தொல்காப்பியர் காலத் தமிழர், புலவர் குழந்தை, முதற்பதிப்பு: 1959, பாரி நிலையம், 52 பிராட்வே சென்னை -1.
9. தமிழர் நாகரிகமும் பண்பாடும், முனைவர் அ. தட்சிணாமூர்த்திB.A(Hons),B.Ed,M.phil, Ph.d., மேனாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை. மறு பதிப்பு: ஜூலை 2008, யாழ் வெளியீடுAP1108, தென்றல் குடியிருப்பு, மூன்றாவது தெரு, மேற்கு அண்ணா நகர், சென்னை 600 040.
10. தமிழக வரலாறு- மக்களும் பண்பாடும், ஆசிரியர் கே .கே .பிள்ளை, முன்னாள் வரலாற்றுப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, முதல் பதிப்பு: நவம்பர் 1942,T.N.T.B.S.(C.P.)NO.350, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.
11. தமிழ் இலக்கியக் கோட்பாடுகள், ஆசிரியர்: டாக்டர் முத்து சண்முகன், முதல் பதிப்பு: டிசம்பர் 2018, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட். 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600 050
12. பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும், சாமி.சிதம்பரனார், முதற் பதிப்பு: மே-1957, ஸ்டார் பிரசுரம், திருவல்லிக்கேணி, சென்னை -5/ மேலக் கோபுரத் தெரு, மதுரை.





http://Creativecommons.org//license/by/4.0/.